# நெறிமுறைக் கோட்பாடுகள்



மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு

Consortium of

CHA

Humanitarian Agencies

மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு (CHA)
No 86, றொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 07,
இலங்கை.
தொ.பே: 4610943/4
மின்னஞ்சல்: info@cha.lk
www.humanitarian-srilanka.org

# நோக்கம்:

இந்த நெறி முறைக் கோட்பாடுகள் எங்களுடைய நடக்கைகளின் தரங்களைப் பேணுகின்றன. இது செயற்பாடுகளின் விபரங்களைப் பற்றியதல்ல. அதாவது ஒருவர் எவ்வாறு உணவு விநியோகத்திற்காக கணிப்புக்களை செய்வதையோ அல்லது அகதிகளுக்கான முகாம் ஒன்றை எவ்வாறு அமைப்பது என்பது பற்றியதோ அல்லது அதையும்விட சுதந்திரம், செயற்திறன் என்பவற்றுடன் இடர் நிலை விளைவுகாட்டும் தாக்கம் என்பவற்றை அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கங்கள் எதிர்பார்க்கும் உயர்தரத்தைப் பேணுவதுடன் தொடர்புடையதாகும். இக்கோட்பாடு சுயேச்சையானதாகும் அத்துடன் இதை நிறுவனங்கள் சுய விருப்புடன் ஏற்றுக்கொண்டு கடைபிடிப்பதுடன் இக் கோட்பாடுகளினால் தரப்பட்டுள்ள நியமங்களையும் பேணுவதாகும்.

யுத்த நிலைமைகளின் போது (ஆயுதப் போராட்டங்களின் போது) இந்த நெறிமுறைக் கோட்பாடுகள் சர்வதேச மனிதாபிமான சட்டத்துடன் இசைந்து பிரயோகிக்கப்படுவதுடன் விளக்கமும் அளிக்கப்படும்.

நெறிமுறைக்கோட்பாடுகள் முதலில் முன்வைக்கப்படும். அத்துடன் மூன்று பின்னிணைப்புக்களும் சேர்த்துக் கொள்ளப்படும்.

இவை விருந்தோம்பும் அரசுகளும், உதவி நல்கும் அரசுகளும், சர்வதேச நிறுவனங்களும் செயற்திறனுள்ள முறையில் மனிதாபிமான உதவிகளை புரிவதற்கு எதிர்பார்க்கும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றிய விபரிப்புகளைக் கொண்டிருக்கும்.

# வரைவிலக்கணங்கள்:

**அரசசார்பற்ற நிறுவனங்கள்:** இங்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் எனப்படுபவை அவை ஸ்தாபிக்கப்பட்ட நாடுகளில் அரசுகளில் இருந்து தனியாக ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்களாகும். அவை உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களாகவோ சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களாகவோ இருக்கலாம்.

**அரசசார்பற்ற மனிதாபிமான அமைப்புகள் (NGHAs)** இந்த ஆவணத்தில் அரச சார்பற்ற மனிதநேய அமைப்புக்கள் என்ற பதம், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கம், சர்வதேச செஞ்சிலுவைக் கமிட்டி, சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைக் குழுச் சங்கங்கள் என்பவற்றுடன் மேலே வரைவிலக்கணப்படுத்தப்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் என்ற பல தரப்பட்ட கூறுகளை உள்ளடக்குவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது இந்த நெறிமுறைக் கோட்பாடுகள் இடர்நிலைகளை பணியாற்றும் அரசசார்பற்ற மனிதநேய அமைப்புக்களையே குறிப்பாக சுட்டி நிற்கிறது.

**அரச உள்ளக நிறுவனங்கள்: IGO's** இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட அரசுகளால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களை இது குறிப்பதுடன் எல்லா ஐக்கிய நாடுகள் நிறுவனங்களையும் பிராந்திய நிறுவனங்களையும் இது உள்ளடக்கும்.

**இடர்:** இடர் எனப்படுவது உயிரிழப்புகளையும் மனிதர்களுக்கு அதிகமான கஷ்டங்களையும் மனத்துயரையும் வருவிப்பதுடன் அதிகளவான உடமைகளுக்கான சேதத்தையும் ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாகும்.

# நெறிமுறைக் கோட்பாடுகள்:

## இடர் விளைவு நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபடும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கங்கள் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றுக்கான நெறிமுறைக் கொள்கைகள்.

### *1. தவிர்க்க முடியாத மனிதநேயமே முதலில் வருகிறது.*

மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக் கொள்வதும், அதனை வழங்குவதும் அடிப்படையான மனிதாபிமானக் கொள்கையாகும். இது எல்லா நாடுகளிலுமுள்ள எல்லா பிரஜைகளாலும் அனுபவிக்கப்பட வேண்டும். சர்வதேச சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் மனிதாபிமான உதவிகள் எங்கு தேவைப்படுகின்றனவோ அங்கு அவ்வுதவிகளை வழங்குவதற்கு எங்களுக்குள்ள கடமைகளை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். இதனால் இந்த அடிப்படை கடமையை நிறைவேற்றும் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடையறாது அவ் உதவிகளை வழங்குவது அவசியமானது.

இடர்நிலைமைகளின் போதான விளைவுகாட்டலில் முக்கியமாக உத்தேசிக்கப்படுவது என்னவெனில் இடரினால் ஏற்படுத்தப்பட்ட தாக்கத்தை மிகக் குறைந்தளவில் தாங்கிக் கொள்ளக் கூடியவர்களின் துயரத்தை துடைப்பதாகும். நாம் மனிதாபிமான உதவிகளை வழங்கும்போது அது ஒரு பக்கச் சார்பானதாகவோ அல்லது ஒரு அரசியல் செயல்பாடாகவோ பார்க்கப்படக் கூடாது. அத்துடன் அது அவ்வாறான கண்ணோட்டத்துடன் பார்க்கப்படவும் கூடாது.

2. ***உதவி பெறுபவரின் சாதி சமயம் மற்றும் என்நாட்டு பிரஜை என்னும் வேறுபாடுகள் உதவி பெறுபவர் விடயத்தில் கருத்திற்கொள்ளப்படக் கூடாது. உதவி வழங்கப்படும் என்பதுடன், வேறு எவ்விதமான எதிரான வேறுபாடுகளின்றியும் உதவிகள் வழங்கப்படவும் வேண்டும். தேவை ஒன்றை மட்டும் அடிப்படையாக வைத்தே உதவிகளுக்கான முன்னுரிமை வழங்கப்படுகிறது.***

இத்தேவைகளை பூர்த்தி செய்ய ஏற்கனவே உள்ள உள்ளூர் இயலளவை வைத்தும் உதவி நிவாரணப் பணிகளை செயற்படுத்துவோம். எங்களுடைய நிகழ்ச்சித் திட்டங்கள் முழுவதிலும் விகிதாசாரத்துவத்தின் பிரதிபலிப்பை கருத்திற்கொள்ளுவோம். மனிதர்கள் எங்கேயெல்லாம் துன்பப்படுகின்றனரோ அங்கே அவற்றை அகற்ற வேண்டும். உயிர் என்பது ஒரு நாட்டின் ஒரு பகுதியில் பெறுமதி வாய்ந்தது போலவே மற்றைய பகுதியிலும் பெறுமதி வாய்ந்தது. இவ்வாறே எங்களுடைய உதவி வழங்கும் ஏற்பாடுகளும் மக்கள் துயரப்படும் அளவிலேயே அதன் பிரதிபலிப்பைக் காட்டும்.

இந்த அணுகுமுறையை அமுல்படுத்துவதில் இடரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்களின் தீர்க்கமான பங்கை நாங்கள் அங்கீகரிக்கின்றோம் என்பதுடன் எங்களுடைய உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களில் பெண்களின் இப்பங்கானது உறுதிப்படுத்தப்படும் என்பதுடன் ஒருபோதும் அவை குறைத்து மதிப்பிடப்பட மாட்டாது. இவ்வாறான சர்வதேச பக்கச்சார்பற்ற மற்றும் சுதந்திரமான கொள்கையானது நாங்களும் எங்களது பங்குதாரர்களும் நியாயமான உதவி நிவாரணரப் பணிகளில் ஈடுபட அதற்கு

தேவையான வளங்களைக் கொண்டிருக்க வேண்டியதுடன் இடரினால் பாதிக்கப்பட்ட மக்களை சமமாக அணுகுவதற்கும் இடமிருந்தால் மட்டுமே இச்செயற்பாடு வினைத்திறன் வாய்ந்ததாக இருக்கும்.

### 3. வழங்கப்படும் உதவிகள் அரசியல் அல்லது சமய ரீதியான நிலைபாடுகளை முன்னெடுக்க பயன்படுத்தப்படக் கூடாது.

மனிதாபிமான உதவிகள் தனிநபர்களதும், குடும்பங்களினதும், சமூகங்களினதும் தேவைக்கு ஏற்பவே வழங்கப்படும்.

அரச சார்பற்ற மனிதநேய அமைப்புகளின் உரிமைகளை நாம் குறிப்பிட்ட அரசியல் அல்லது சமய கருத்துக்களுடன் இணைக்கமாட்டோம். உதவிகள் வழங்கப்படும் போது இவ்வாறான கருத்துக்களை அடிப்படையாக வைத்து உதவி பெறுவதற்கு உதவிகள் வழங்கப்பட மாட்டாது என்பதை உறுதியாக கூறுகிறோம். நாம் உதவிகளை ஒரு குறிப்பிட்ட அரசியல் அல்லது சமயத்தை தளுவியோ அவற்றின் மூலாதாரம் தொடர்பான இராஜாங்க ஆவணங்களோ, நிவாரணப் பணிகளில் உதவியளிக்கும் போது அதற்காகவே வழங்கவோ விநியோகிக்கவோ உறுதி மொழி வழங்க மாட்டோம்.

### 4. அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையின் உபகரணங்களாக செயற்படாமல் இருக்க நாங்கள் முயற்சி எடுப்போம்.

அரச சார்பற்ற மனிதநேய அமைப்புக்கள் அரசாங்கங்களில் இருந்து சுதந்திரமாக இருக்கின்றன. எனவே நாம் எங்களுடைய சொந்தக் கொள்கைகளையும் அமுலாக்கல் தந்திரோபயங்களையும் வகுத்துக் கொள்வோம். எனவே

நாம் எந்த ஒரு அரசாங்கத்தினதும் கொள்கைகளை அமுலாக்க முனைய வேண்டியதில்லை. இதற்கு விதிவிலக்காக எங்களுடைய சொந்தக் கொள்கைகள் அரசினது கொள்கைகளுடன் ஒத்திசைந்து காணப்படும் சந்தர்ப்பங்களைக் கூறலாம்.

நாங்கள் ஒருபோதும் அறிந்தோ அல்லது கவனக் குறைவினாலே எம்மை அல்லது எம்முடைய ஊழியர்களை அரசியல் அல்லது இராணுவ அல்லது ஏனைய அமைப்புகளுக்கு பொருளாதார ரீதியில் அரசாங்கங்களுக்கு உணர்திறன் மிக்க குறிப்பாக மனிதாபிமான நோக்கங்களுக்காகவன்றி வேறு எந்த ஒரு நோக்கத்திற்கும் தகவல்களைப் பெறுவதை அனுமதிக்கவே மாட்டோம். அதே போல் உதவி நல்கும் அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைகளின் உபகாரங்களாக செயற்பட மாட்டோம்.

எமது வேலைகளுக்கு ஆர்வமுடைய தனிநபர்களால் வழங்கப்படும், சுயாதீனமான சேவைகளையும் நிதியுதவிகளையும் நாம் மதிக்கிறோம். அத்துடன் இவ்வாறான சுயாதினமான ஊக்கப்படுத்துதலினால் விருத்தியாகும் சுதந்திரமான செயற்பாடுகளை நாம் அங்கிகரிக்கிறோம். எங்களுடைய சுதந்திரத்தன்மையை பாதுகாக்கும் பொருட்டு நாம் ஒரு தனியான உதவி வழங்கும் ஆதாரம் ஒன்றில் இருந்து மட்டும் உதவி பெறுவதை தவிர்த்துக் கொள்கிறோம். அமுலாக்கலிலும் உள்வாங்குவதின் மூலமே திறமையான முறையில் அடையலாம்.

## *5. நாம் கலாச்சாரத்தையும் பொதுவான பழக்கவழக்கங்களையும் மதித்து நடப்போம்*

நாம் பணியாற்றும் நாடுகளினதும், சமூகங்களினதும், பழக்கவழக்கங்களையும், கட்டமைப்புகளையும், கலாசாரத்தையும் மதிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் எடுப்போம்.

## *6. இடர் நிலைமைகளுக்கு முகம் கொடுக்கக் கூடிய வண்ணம் உள்ளூர் இயலுமையைக் கட்டியெழுப்ப முயலுவோம்.*

எல்லா மக்களும் சமூகங்களும், இடர் நிலைமைகளின் போதும் கூட இயலளவையும் அதேபோல் பாதிப்புக்குள்ளாகும் தன்மையும் கொண்டுள்ளன. முடியுமான போதெல்லாம் நாம் இந்த இயலளவுகளை அதாவது உள்ளூர் மக்களை சேவைக்கு அமர்த்துவதன் மூலமும், உள்ளூர் கம்பனிகளுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவதுடன் மூலமும் ஸ்திரப்படுத்துவோம். அத்துடன் தேவை ஏற்படும் போது உள்ளூர் அரச நிறுவனங்களுடனும் ஒத்துழைப்பை மேற்கொள்ளுவோம்.

எமது அரச உதவிச் செயற்பாடுகளின் போது முறையான ஒருங்கிணைப்பிற்கு அதிக முன்னுரிமை வழங்குவோம். இவை அந்நாடுகளில் அதிகமாக நிவாரணப் பணிகளில் நேரடியாகவே ஈடுபட்டுள்ளவர்களால், திறமையான முறையில் நடைபெறுவதுடன், அவற்றுடன் தொடர்புடைய ஐ.நா. நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இவற்றில் இணைத்துக் கொள்ளப்படவும் வேண்டும்.

***7. நிவாரண உதவிகளின் முகாமைத்துவத்தில் பயன்பெறு- வோரையும் உள்வாங்கும் வழிகளையும் கண்டறிவோம்.***

இடர் நிவாரண உதவிகள் ஒரு போதும் நலன் விரும்பிகளின் மேல் சுமத்தப்படக் கூடாது. வினைத்திறன் வாய்ந்த நிவாரணத்தையும் நிலைத்து நிற்கக் கூடிய புனர்வாழ்வும் கருத்தில் கொண்டும் பயன் பெறுபவர்களை நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டங்களின் வடிவமைப்பிலும் முகாமைத்துவத்திலும்,

***8. நிவாரண உதவிகள் எதிர்காலத்தில் இடர்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை முடியுமான வரை குறைக்க வழிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.***

எல்லா நிவாரணச் செயற்பாடுகளும் நேரான அல்லது எதிரான முறையில் நீண்டகால அபிவிருத்திக்கான எதிர்கால பலாபலன்களை பாதுகாக்கும் வண்ணமும் நிலைத்து நிற்கக்கூடிய எதிரான தாக்கத்தை குறைக்க இயலுமான வரை முயலுவோம். அத்துடன் வெளியில் இருந்து வரும் உதவிகளில் நீண்ட காலத்திற்கு பயன்பெறுவோர் தங்கியிருப்பதையும் தவிர்க்க முயலுவோம்.

***9. நாம், வளங்களைப் பெற்றுக்கொள்பவருக்கும், நாம் உதவி வழங்குபவர்களுக்கும் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.***

நாம் அனேகமான சந்தர்ப்பங்களில், இடர் நிலைமைகளின்போது உதவி அளிக்க விரும்புவோருக்கும்

உதவியை நாடி நிற்பவர்களுக்குமிடையிலானதொரு நிறுவனத்தின் இணைப்பிற்கான பங்குதாரர்களாகவே செயற்படுகிறோம். ஆகவே நாம் இருதரப்பினருக்கு பதிலளிக்க வேண்டியவராகிறோம்.

உதவி நல்கிறவர்களுடனும், பயன்பெறுபவர்களுடனும் உள்ள எல்லா கொடுக்கல் வாங்கல்களிலும் வெளிப்படைத் தன்மையையும், திறந்த மனப்பான்மையையும் பிரதிபலிக்கலாம்.

நிதிப் பயன்பாடு தொடர்பிலும் எமது பணிகளின் வினைத்திறன் தொடர்பிலும் நாம் எமது செயற்பாடுகள் தொடர்பாக அறிக்கைகளைத் தரவேண்டும் என்பதை அங்கீகரிக்கிறோம்.

நிறுவன உதவிகளின் விநியோகத்தில் போதுமான அளவு கண்காணிப்பை உறுதிப்படுத்த எமக்குள்ள கடமையையும் நாம் அங்கீகரிக்கிறோம். அத்துடன், இடர் நிவாரணத்தின் தாக்கத்தைப்பற்றி ஒழுங்கான மதிப்பீடுகளைச் செய்வதையும் உறுதிப்படுத்துகின்றோம்.

எங்களுடைய பணிகளின் தாக்கத்தைப் பற்றியும், தாக்கத்தை எல்லைப்படுத்தும் அல்லது ஊக்குவிக்கும் காரணிகள் பற்றியும் நாம் அறிக்கை தர எதிர்பார்க்கிறோம்.

எமது நிகழ்ச்சித்திட்டங்கள் பெறுமதிவாய்ந்த வளங்களின் வரையத்தை குறைக்கும் வகையில் அதிஉயர் நிபுணத்துவத்தின் தரங்களை அடிப்படையாக கொண்டிருக்கும்.

## *10. நாம் எமது தகவல்கள், பிரசாரங்கள், விளம்பர நடவடிக்கைகள் போன்றவற்றில் இடரினால் பாதிக்கப்பட்ட மக்களை கௌரவமான மனிதர்களாகவே மதிக்க வேண்டும். அவர்களை எதற்கும் உதவாத பொருட்களாகப் பாவிக்கக் கூடாது.*

செயற்பாடுகளில், இடரினால் பாதிக்கப்பட்டவர்களை சமமான பங்காளர்களாக கருதுவதை ஒருபோதும் தவிர்க்கக்கூடாது. எமது பொதுத் தகவல்களில் பாதிக்கப்பட்டவர்களின் பாதிப்புக்குள்ளாகக் கூடிய தன்மைபற்றியும், அவர்களது பயன்கள் பற்றியும் மாத்திரமின்றி அவர்களது இயலளவுகளையும், எதிர்பார்ப்புகளையும் இடர்நிலைமைகளுடன் சேர்ந்து கோடிட்டுக் காட்டுதல் வேண்டும்.

நாம் பொது மக்களிடம் இருந்து பதில்களைப் பெறும் வண்ணம் ஊடகத்துறையினருடன் ஒத்துழைக்கும் அதே வேளையில் முழுமையான உதவி நிவாரண பணிகளை அதிகரிக்கும் வண்ணம் அது தொடர்பான கொள்கைக்கு மேலாக தேவைக்கான விளம்பரத்துக்காக உள்ளக அல்லது வெளியக கோரிக்கைகளுக்கு இடமளிக்க மாட்டோம். அவசியமான நிலமைகளில் பயன்பெறுபவர்களின் அல்லது எமது ஊழியர்களின் பாதுகாப்பை முன்னிட்டோ, அல்லது பயன்பெறுபவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படும் எனக் கருதப்படும் சந்தர்ப்பங்களிலோ ஊடக விளம்பரங்களுக்காக ஏனைய நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களுடன் போட்டியிடுவதை தவிர்த்துக் கொள்வோம்.

விநியோகங்கள் பொதுவாக சுதந்திரமாகவும், கடப்பாடுகளின்றியும் எடுத்து செல்லப்பட அனுமதிக்கப்பட வேண்டியதுடன் அவற்றிற்கு,

# பணிபுரியும் சூழல்:

மேலே வரையறுக்கப்பட்டுள்ள நெறிமுறைக் கோட்பாடுகளுக்கு அமைய நடப்பதற்கு ஒருதலைப்பட்சமான உடன்பாட்டை தெரிவித்த பின்னர் இடர்நிவாரணப் பணிகளின் போது அரசசார்பற்ற மனிதநேய அமைப்புக்கள் அவர்களது வினைத்திறன் வாய்ந்த பங்கு பற்றுதலை இலகுபடுத்துவதற்கு உதவி நல்கும் அரசாங்கங்களாலும், அரச உள்ளக நிறுவனங்களாலும், விருந்தோம்பும் அரசாங்கங்களாலும், குறிப்பாக ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களாலும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என நாம் விரும்பும் சூழல் குறித்த சில குறிகாட்டும் வழிகாட்டுதல்கள் வழிகாட்டுவதற்காகவே முன்வைக்கப்படுகின்றன.

இவைகளைகக் கடைபிடிக்க சட்டப்படி எந்த கடப்பாடுகளையும் அரசாங்கங்களும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் கையெழுத்திடப்பட்ட எந்தவொரு ஆவணத்தின் மூலம் அவர்கள் இதை ஏற்றுக்கொள்கிறார்கள் எனக் குறிப்பிடுவதை நாம் எதிர்பார்க்கவில்லை. எனினும் எதிர்காலத்தில் இவ்வாறானதொரு இலக்கை நோக்கி செல்வதற்கு இது உதவியாக இருக்கும். இவை திறந்த மனதுடனும் ஒத்துழைப்புடனும் முன்வைக்கப்படுவதுடன் எமது பங்குதாரர்கள் நாம் அவர்களுடன் எதிர்பார்க்கும் இலட்சியத் தொடர்புகளை பற்றியும் அவர்களுக்கு புரியவைக்கும்.

## பின்னிணைப்பு 1: இடரினால் பாதிக்கப்பட்ட நாட்டு அரசாங்கங்களுக்கான சிபாரிசுகள்.

### *1. அரசாங்கங்கள், அரசசார்பற்ற மனிதாபிமான அமைப்புக்களின் சுதந்திரத்தையும், மனிதாபிமானத்தையும், பக்கச் சார்பற்ற செயற்பாடுகளையும் மதிக்கவும், அங்கிகரிக்கவும் வேண்டும்.*

அரச சார்பற்ற மனிதாபிமான அமைப்புக்கள் சுதந்திரமான நிறுவனங்களாகும். இந்த சுதந்திரமானதும், பக்கச்சார்பற்ற தன்மையும் உதவியை எதிர்பார்க்கும் அரசாங்கங்களால் மதிக்கப்பட வேண்டும்.

### *2. உதவியை எதிர்பார்க்கும் அரசாங்கங்கள் அரசசார்பற்ற மனிதாபிமான நிறுவனங்கள் இடரினால் பாதிக்கப்பட்ட மக்களை விரைவில் அணுகுவதை இலகுபடுத்த வேண்டும்.*

அரசசார்பற்ற மனிதாபிமான அமைப்புக்களின் அரசியல் சார்பற்ற செயற்பாடுகளையும், பக்கச்சார்பற்ற தன்மையையும் ஏற்றுக்கொண்டு இவ்வாறான உதவிகளை எதிர்பார்க்கும் அரசுகள் கொண்டுள்ள அதி உயர் பொறுப்புக்களின் ஒரு பகுதியாகும் உதவியை எதிர்பார்க்கும் அரசுகள் நிறுவனப்பணியாளர்களின் விரைவான வருகையை நிலைமாற்ற அல்லது நுழைவு அல்லது வெளியேறுதல் தொடர்பான விசாக்களை பெறுவது தொடர்பில் விட்டுக் கொடுப்புக்களை அல்லது இவற்றை விரைவாகப் பெறுவதற்கான வழிகளை மேற்கொள்வதன் மூலம் இலகு படுத்த வேண்டும்.

அவசர நிவாரணப் பணிகள் செயற்படும் காலகட்டத்தில் அரசாங்கங்கள் சர்வதேச நிவாரணப் பொருட்களையும்,

சர்வதேச பணியாளர்களையும் எடுத்துவரும் விமானங்களுக்கு தரையிறங்குவதற்கான உரிமையும் வான் பரப்பில் பறப்பதற்கான அனுமதியையும் வழங்க வேண்டும்.

### *3. இடர் நிலைமைகளின் போது அரசாங்கங்கள் சரியான நேரத்தில் நிவாரணப் பொருட்களினதும் தகவல்களினதும் சீரான வழங்கலை இலகுபடுத்த வேண்டும்.*

நிவாரணப் பொருட்களும் உபகரணங்களும் மனித துயரத்தை போக்குவதற்காகவே நாட்டினுள் கொண்டுவரப் படுகின்றனவே அன்றி பொருளாதார நன்மைகளுக்காகவோ இலாபமீட்டவோ அல்ல. இவ்வாறான அரசாங்கங்கள் மேலதிக அரசியல் அல்லது கருத்தியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசசார்பற்ற மனிதநேய அமைப்புக்களை பயன்படுத்தக் கூடாது. விண்ணப்பப் பத்திரங்களோ, ஏற்றுமதி அல்லது உடன் இறக்குமதி அனுமதிப்பத்திரங்களோ அல்லது ஏனைய கட்டுப்பாடுகளோ அல்லது தரையிறக்கற் கட்டணங்களோ அல்லது துறைமுகக் கட்டணங்களோ இருக்கக்கூடாது.

உதவி நிவாரணப் பணிகளுக்கு தேவையான உபகரணங்களால் அதாவது பின்வருவன உள்ளடங்கலாக வாகனங்கள், இலகு விமானங்கள், தொலைதொடர்பு சாதனங்கள் போன்றவற்றை தற்காலிகமாக இறக்குமதி செய்வதை உதவி எதிர்பார்க்கும் அரசாங்கம் தற்காலிகமாக அவற்றின் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதில் இருந்தும் பதிவு செய்தலில் இருந்தும் விலக்கு அளிப்பதன் மூலம் இலகுபடுத்த வேண்டும்.

அதே போல் நிவாரணப் பணிகளின் முடிவில் இவ்வாறான உபகரணங்களை மீளவும் கொண்டு செல்லும் போது

அவற்றுக்கான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தக் கூடாது. விருந்தோம்பும் அரசாங்கங்கள் குறிப்பிட்ட வானொலி அலைவரிசைகளை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்கள் பயன்படுத்தும் பொருட்கள் ஒதுக்கிவைக்க ஊக்குவிக்கப்படுகின்றன.

அத்துடன் இந்த அலைவரிசைகள் தொடர்பாக இடர்நிலைகள் ஏற்பட முன்னர் இடர் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் சமூகத்தினருக்கு அறிவித்திருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் அப்பணிகளில் அவர்களுக்குத் தேவையான எல்லா விதமான தொடர்பாடல் தேவைகளையும் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

### *4. அரசாங்கமானது இடர்தொடர்பானதகவல்களையும்திட்டமிடல் சேவைகளையும் வழங்கும் பொருட்டு ஒருங்கிணைக்கப்பட்ட சேவையை வழங்க வேண்டும்.*

முடியுமான வரையில் அனர்த்தம் ஒன்றினால் பாதிப்படைந்தவர்களின் தேவைகள் தொடர்பான சிறந்த கணிப்பீட்டை அடிப்படையாகவும் நிவாரணப் பணிகளில் முழுமையான திட்டமிடலும் ஒருங்கிணைப்பும் இறுதியாக உதவிகளை எதிர்பார்க்கும் அரசின் பொறுப்பாக அமைகிறது.

நிவாரண உதவிகள் தொடர்பாகவும், திட்டமிடல் மற்றும் அமுலாக்கும் தொடர்புடைய அரச முறைகள் எதிர்பார்க்கப்படும் பாதுகாப்பு தொடர்பான தகவல் போன்ற தகவல்களை அரசசார்பற்ற மனிதநேய அமைப்புகளுக்கு வழங்கினால் அவை திட்டமிடலையும் ஒருங்கிணைப்பையும்

அதிகப்படுத்தும். அரசாங்கங்கள் இவ்வாறான தகவல்களை அரசசார்பற்ற மனிதநேய அமைப்புகளுக்கு வழங்குவதற்கு தூண்டப்படுகின்றன.

வினைத்திறன் வாய்ந்த ஒருங்கிணைப்பை இலகுபடுத்துவதற்காகவும் வினைத்திறன் உள்ள முறையில் நிவாரண உதவிகளைப் பயனிபடுத்திக் கொள்வதற்காகவும் உதவிகளை எதிர்பார்க்கும் அரசாங்கங்கள், உள்வரும் அரசசார்பற்ற மனிதாபிமான அமைப்புக்கள் தொடர்பு கொள்ளும் பொருட்டு தனியான ஒரு தொடர்பு மையத்தை தேசிய மட்டத்திலான அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் வண்ணம் இடர் நிலைகளுக்கு முன்னதாக ஏற்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றனர்.

## *5. ஆயுத முரண்பாடுகளின் போது இடர் நிவாரணம்.*

ஆயுத முரண்பாடுகள் உள்ள போது இடர் நிவாரணச் செயற்பாடுகள் சர்வதேச மனிதாபிமான சட்ட ஏற்பாடுகளுக்கமைய இடம்பெறும்.

***பின்னிணைப்பு 11 : உதவி நல்கும் அரசாங்கங்களுக்கான சிபாரிசுகள்.***

1. ***நிதிக்கொடை வழங்கும் அரசாங்கங்கள். அரசசார்பற்ற மனிதநேய அமைப்புக்களின் சுயாதீன, மனிதநேய மற்றும் பக்கச்சார்பற்ற நடவடிக்கைகளை அங்கீகரித்து அவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும்.***

அரச சார்பற்ற மனிதநேய அமைப்புக்கள் எனப்படுபவை சுயாதீனமான அமைப்புக்களாகும். அவற்றின் சுயாதீனமும் பாராபட்சமின்மையும் அரசாங்கங்களினால் மதிக்கப்பட வேண்டும். உதவி நல்கும்

2. ***சுதந்திரமான நடவடிக்கைகளுக்கு உத்தரவாதம் வழங்கியவாறு உதவி நல்கும் அரசாங்கங்கள், நிதி உதவி வழங்க வேண்டும்.***

அனர்த்தங்களில் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு எவ்வாறு பொருள் மற்றும் அவர்கள் வழங்குகின்றார்களோ, அதே போலவே உதவி நல்கும் அரசாங்கங்களிலிருந்தும் உதவிகளை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். நிவாரண நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் என்பது முற்றிலும் சார்பற்ற மனிதநேய அமைப்புகளின் பொறுப்பாவதுடன் குறிப்பிட்ட சார்பற்ற மனிதநேய அமைப்புகளின் கொள்கையின் அடிப்படையிலேயே அந்நடவடிக்கைகள் நிறைவேற்றப்படும்.

3. ***அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களை அ.சா.ம.அ.கள் இலகுவில் அணுகுவதற்கு தம்மாலான உதவிகளை வழங்குவதற்கு உதவி நல்கும் அரசாங்கங்கள் முன்வர வேண்டும்.***

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதற்கு அரசசார்பற்ற மனிதநேய அமைப்புகளின்

ஊழியர்கள் செல்லவேண்டியதன் முக்கியத்துவத்தையும் தேவையையும் உதவி நல்கும் வழங்கும் அரசாங்கங்கள் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவையானவிடத்து இத்தகைய விடயங்களில் செயற்பட்டு அரசாங்கங்களுடன் ஒரு இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபடவும் அவை தயாராக வேண்டும்.

## பின்னிணைப்பு 111 : அரசாங்க உள்ளக நிறுவனங்களுக்கான சிபாரிசுகள்.

### *1. அரசாங்க உள்ளக நிறுவனங்கள் உள்ளூர், மற்றும் வெளியூர் அரச சார்பற்ற மனிதநேய அமைப்புகளை பெறுமதி மிக்க பங்காளர்களாக அங்கீகரிக்க வேண்டும்.*

அரச சார்பற்ற மனிதநேய அமைப்புகள் அனர்த்தங்களின் பாதிப்புகளுக்கு சிறந்ததொரு தீர்வை முன்வைப்பதற்காக ஐ.நா மற்றும் ஏனைய அரச உள்ளக அமைப்புகளுடன் இணைந்து பணிபுரிய விரும்புகின்றன. அதனை அவர்கள் அனைத்து பங்காளர்களினதும் ஒருமைப்பாட்டுக்கும் சுதந்திரத்துக்கும் மதிப்பளிக்கக்கூடிய விதத்தில் மேற்கொள்கின்றார்கள். அரச உள்ளக நிறுவனங்கள் அ.சா.ம.அ.களின் பாராபட்சமின்மையும் சுதந்திரத்தையும் மதிக்கவேண்டும். நிவாரண திட்டங்களின் தயாரிப்பின் போது அ.சா.ம.அ.களை ஐ.நா. நிறுவனங்கள் கலந்தாலோசிக்க வேண்டும்.

### *2. அரச உள்ளக நிறுவனங்கள் சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் ஒட்டுமொத்த கட்டமைப்பு ஒன்றை தயாரிப்பதில் அ.சா.ம.அ.கள் உதவியை நாடிநிற்கும் அரசாங்கங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.*

சர்வதேச அங்கீகாரம் ஒன்று தேவைப்படும் ஒட்டுமொத்த அனர்த்த நிவாரண ஒருங்கிணைப்பு கட்டமைப்பு ஒன்றை

முன்வைக்கும் அதிகாரம், நிவாரண ஒருங்கிணைப்பு கட்டமைப்பு ஒன்றை முன்வைக்கும் அதிகாரம், பொதுவில் அ.சா.ம.அ.கள் வசம் இல்லை. இந்த பொறுப்பு, உதவியை நாடிநிற்கும் அரசாங்கங்களிடமும் உரிய ஐ.நா நிறுவனங்களிடமுமே உள்ளன. இந்த சேவையை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கும் சமூகங்களுக்கும் உரிய நேரத்தில் துரித கதியில் வழங்குவதற்கு இவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தம்முடைய சேவைகளின் செயற்திறன் மிக்க ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்தும் முயற்சிகளில் அ.சா.ம.அ.கள் ஈடுபடவேண்டும்.

## *3. ஐ.நா. நிறுவனங்களினால் அரசசார்பற்ற மனிதநேய அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் அரச உள்ளக நிறுவனங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.*

அரசாங்க உள்ளக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் பாதகாப்பு ஏற்பாடுகள், அவை கோரப்படும் பட்சத்தில் அரச சார்பற்ற மனிதநேய அமைப்புகளின் பங்காளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

## *4. உரிய தகவல்களை பெறுவதற்கு ஐ.நா நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதே வழிமுறைகள் அரசசார்பற்ற மனிதநேய அமைப்புகளுக்கும் அரச உள்ளக நிறுவனங்களினால் வழங்கப்பட வேண்டும்.*

நற்பயனளிக்கக் கூடிய அனர்த்த நிவாரண நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உகந்த அனைத்து தகவல்களையும் அரச சார்பற்ற மனிதநேய அமைப்புகளுடன் பகிர்ந்துகொள்ளுமாறு அரச உள்ளக நிறுவனங்கள் உந்தப்பட்டுள்ளன.

CONSORTIUM OF
CHA
HUMANITARIAN AGENCIES

மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு (CHA)
86, றொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 07,
இலங்கை.
தொ.பே: 4610943/4
மின்னஞ்சல்: info@cha.lk
www.humanitarian-srilanka.org